**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 53/2024**
**வாதி தரப்பு சாட்சி–3 பன்னீர்செல்வம்  – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 04.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பன்னீர்செல்வம் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | பால்சாமி | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 69 |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | |
|---|---|---|
| 1. | எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது | வா.சா.ஆ.14 |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் எட்டாம் வகுப்பு படித்துள்ளேன். தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் இடையப்பட்டி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் கருப்பண்ணன் பெயரில் உள்ளது. நான் மேற்படி பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் சுமார் 10 வருடத்திற்கு முன்பு பார்த்துள்ளேன். தற்போது தாவா சொத்திற்கான பட்டா கருப்பண்ணன் பெயரிலேயே உள்ளதா அல்லது மாறி உள்ளதா என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் இருப்பது திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், முத்தரசநல்லூர் என்றால் சரிதான். இடையப்பட்டி கிராமத்திற்கும், முத்தரசநல்லூருக்கும் இடையே சுமார் 30 கி.மீ தொலைவு இருக்குமா என்றால் இருக்கும்.

2) இடையப்பட்டி கிராமத்தில் எனக்கு சொந்தமாக வீடு, நிலம் இல்லை என்றால் சரிதான். நான் வேலைக்கு அங்கு வந்து செல்வேன். வாதிகள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை. என்னை சாட்சியம் அளிக்க காமாட்சி அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். கருப்பண்ணன் தாவா சொத்தை யாரிடம் இருந்து வாங்கினார் என்றால் அய்யண்ணன் என்பவரிடம் இருந்து 1986ல் வாங்கினார். தாவா சொத்து சம்பந்தமாக ஏற்கனவே ஒரு வழக்கு நடந்து நீதிமன்றத்தில் ஏலம் போன விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தினை ஏலம் எடுத்தது யார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

அய்யண்ணன் ஏலம் எடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து அய்யண்ணன் பெயருக்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

3) அய்யண்ணன் ஏலம் எடுத்த சொத்தை யாருக்கு விற்பனை செய்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் வெள்ளைச்சாமி என்பவருக்கு விற்றார். வெள்ளைச்சாமி கிரையம் வாங்கிய விபரம் தெரியுமா என்றால் கொடுத்தாக சொன்னார்கள். வழக்கு யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் வெள்ளைச்சாமிக்கு என்ன உறவு என்றால் குழந்தைகள் மற்றும் மருமகள், மனைவி ஆவார்கள். வெள்ளைச்சாமி கிரையம் பெற்ற பிறகு அவர் பெயரில் பட்டா உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வெள்ளைச்சாமி கிரையம் பெற்ற பிறகு அவர் அனுபவத்தில் இருந்து வந்து அவர் இறந்த பின்னிட்டு பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் தான் அனுபவத்தில் உள்ளார்கள்.

4) குத்தகை சம்பந்தமாக ஏதாவது ஆவணம் பார்த்தேனா என்றால் இல்லை வாய்மொழியாக பேசி இருந்தார்கள். எனக்கு தாவா சொத்தைப் பற்றியோ, ஆவணங்கள் பற்றியோ தெரியாது என்றால் சரியல்ல. நான் வாதி குடும்பத்திற்கு வேண்டப்பட்டவர், வெளியூரில் உள்ள என்னை சாட்சியாக விசாரித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது சாட்சிய பிராமண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் வாதியால் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Sd/–R. தமிழரசி**
**Principal District Munsif,**
**Kulithalai.**